# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி
## (திருத்தம்)

**2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்களால்*
*2018, யூன் மாதம் 19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2018, மே மாதம் 31 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **253 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***சட்டப்பயன்பற்றிய கூற்று***

***வாசகம் 2*** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, இசை வாக்கப்பட்ட வியாபாரப்பொருள் விவரண மற்றும் கோவையிடும் இலக்கங்களின்கீழ் அடையாளம் காணப்பட்ட குறித்தசில மதுபானங்களுக்கு வழங்கப்பட்ட விலக்களிப்புக் காலப்பகுதியை வரையறுப்பதாகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது பின்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்வதாகும்-

(அ) உள்ளூரில் உற்பத்திசெய்யப்பட்ட தேங்காய் தொடர்பான பொருட்கள் மற்றும் விற்கப்படாது இருப்பில் மீதமாகவுள்ள மதுபானம் அத்துடன் மின்சாரம் வழங்குகை என்பன தொடர்பிலான விலக்களிப்புகள் பற்றி இருந்து வருகின்ற கட்டளைக்கற்களை மீளாய்வு செய்தல்;

(ஆ) குறித்தசில புதிய பொருட்களினதும், குறித்தசில சேவைகளினதும் இறக்குமதிக்கான விலக்களிப்பை நீடித்தல்.

## நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி
## (திருத்தம்)

*ச.வ. - ஓ. 10/2018*

**2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டி யெழுப்புதல் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

***1***. இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***2***. இரண்டாயிரத்துப் பதினாறாம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதும், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவானது, அதன் (2) ஆம் உட்பிரிவின் (iv) ஆம் பந்தியின் (13) ஆம் உட்பந்தியிலுள்ள "இறக்குமதியாளரினால் மாத்திரம் விற்கப் பட்ட அத்தகைய மதுபானங்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2018, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் இறக்குமதி யாளரினால் மாத்திரம் விற்கப்பட்ட அத்தகைய மதுபானங்கள்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத் துக்கான முதலாம் அட்டவணை யைத் திருத்துதல்.*

***3***. இரண்டாயிரத்துப் பதினேழாம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வட்டணையின் பாகம் I இல் -

(அ) அதன் (XLVI) ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

"(XLVI) (அ) 2014, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து தொடங்கும் மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்கு உற்பத்தியாளரால் விற்பனையின் போது உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய்;

(ஆ) 2018, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து தொடங்கும் மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்கு உற்பத்தியாளரால் விற்பனையின்போது உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட தேங்காய்ப் பால்,தேங்காய் எண்ணெய், புண்ணாக்கு, தேங்காய்ச் சொட்டு, தேங்காய்ச் சிரட்டைகள் அல்லது இளநீர்;";

(ஆ) அதன் (L) ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும்:-

"(L) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்காக, சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட வியாபாரப் பொருள் விவரண மற்றும் கோவையிடும் இலக்கங்களின் கீழ் இனங்காணப்பட்டதும், 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சுங்கத்தீர்வைக்குப் பொறுப்புடையதும், இறக்குமதியின் மீது, 1979ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்

சட்டத்தின் கீழான ஆயவரி அல்லது உற்பத்தியின் மீது (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ், விடயத்திற்கேற்ப, வரிப் பொறுப்புக்குள்ளாக்கப்படக் கூடியதுமான மதுபானம், 2014, ஒற்றோபர் 25 ஆந் தேதியன்று விற்கப்படாது இருப்பில் மீதமாகவுள்ள அத்தகைய உற்பத்தி செய்யப்பட்ட மதுபானம் எனில், அவை 2014, ஒற்றோபர் 25ஆந் தேதியின் பின்னர் உற்பத்தி செய்யப்பட்டிருப்பின், அதேவரிக்கு வேறுவகையில் பொறுப்பாக்கப் பட்டிருக்கக்கூடிய அத்தகைய மதுபானம் உள்ளடங்கலாக.".

(இ) (LI) என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(LII) கயாக்ஸ், கனோஸ், கைட்சேர்பிங் மற்றும் சுழியோடல் உள்ளடங்கலாக, நீர் விளையாட்டுகளுக்கான மோட்டார் மயமாக்கப்படாத உபகரணங்களினதும் உதிரிப் பாகங்களினதும் இறக்குமதி;

(LIII) இறக்குமதியின்போது சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட வியாபாரப் பொருள் விவரண மற்றும் கோவையிடும் இலக்கங்களின்கீழ் வகுப்பாக்கம் செய்யப்பட்ட, ஹாங் கிளைடிங், பலூனிங், டிரிகிபில்ஸ், பரசூட் மற்றும் பரா, கிளைடர்ஸ் உள்ளடங்கலாக, வான விளையாட்டுகளுக்கான வலுவூட்டப்படாத உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்;

(LIV) வெட்டுதல், பட்டை தீட்டுதல் மற்றும் மீள் ஏற்றுமதி செய்தல் நோக்கங்களுக்காக இரத்தினக் கற்களின் இறக்குமதி;

(LV) பச்சைவீடுகளுக்கும் பொலி சுரங்கங்களுக்குமான உபகரணங்களும் பச்சைவீடுகளை நிருமாணிப்பதற்கான மூலப்பொருட்களும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுவதில்லை என்ற நிபந்தனைக்கமையவும் மற்றும் அவை கமத்தொழில் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் விதப்புரையின் மீது அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டவை என்னும் நிபந்தனைக்கமையவும், எவையேனும் வகையினவான கமத்தொழில் விளைபொருட்களை அல்லது தாவரங்களை வளர்ப்பவரெவரினாலும் செய்யப்படும் அத்தகைய பச்சை வீடுகளுக்கும் பொலி சுரங்கங்களுக்குமான உபகரணங்களினதும் பச்சைவீடுகளை நிருமாணிப்பதற்கான மூலப்பொருட்களினதும் இறக்குமதி.”.

(2) அவ்வட்டவணையின் பாகம் II இல் -

(அ) அதன் (ii) ஆம் விடயத்தின் பந்தி (அ) இல் “2017, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற காலப்பகுதிக்காகவும் மின்சாரம் வழங்குதல்;” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “2016, நவெம்பர் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற காலப்பகுதிக்காகவும் மின்சாரம் வழங்குதல்; அத்துடன்”; என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) (xxxix) என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(XL) *2018*, ஏப்பிறல் *1*ஆந் தேதியிலிருந்து பயனுக்கு வருகின்ற, (*422* ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் தாபிக்கப்பட்ட, இலங்கை பணவைப்பு காப்புறுதித் திட்டத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் சேவை."

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்.